DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | காந்தா (எ) காந்திமதி | Village | வடக்குப்பட்டு |
| Husband's Name | திருப்பதி | Taluk | வாணியம்பாடி |
| Age | 65 | Calling | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **17.04.2026**

**<u>O.S. No. 160/2022</u>** **<u>வா.சா.1</u>** **<u>03.44 PM – 04.05 PM</u>**

**<u>குறுக்கு விசாரணை –</u>**

1. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முனிசாமி எந்த தேதியில் இறந்தார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 15.01.1998–ல் நானும் காளியம்மாளும் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் எங்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அன்றைய தேதியில் இருந்து இன்றைய தேதி வரையிலும் கிருஷ்ணன் இறந்த பிறகு அவருடைய 1 முதல் 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் அவருடைய பங்கு உள்ளது என்றுசொன்னால் இல்லை ஒன்றாகத்தான் வைத்திருக்கிறோம் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என சாட்சி மேலும் தற்போது கூறுகிறார்.

2. வழக்குசொத்திற்குண்டான பட்டா இன்றைய தேதி வரையிலும் எத்தனை நபர்களின் பெயரில் உள்ளது என எனக்கு தெரியாது என்று சொன்னால் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என சாட்சி கூறுகிறார். என்னுடைய தரப்பில் இந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சாட்சி இந்த வழக்கை சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றும் தனக்கு ஆவணங்களை பற்றி தெரியாது எனக் கூறுகிறார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு என்னை யார் வக்கீல் இடம் அழைத்து சென்றது என்றால் நானே தான் சென்றேன்.

3. அப்படி நான் வக்கீல் இடம் சென்ற போது ஆதாரம் ஏதேனும் எடுத்துக் கொண்டு சென்றேனா என்றால் சொத்து எனக்கு வாங்கி கொடுக்க வழக்கு தாக்கல் செய்ய சென்றேன். இந்த வழக்கிற்கு உண்டான ஆவணங்களை வக்கீலிடம் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் சாட்சி தற்போது என் மகன் தான் வழக்கறிஞரிடம் அழைத்து சென்றார் என பதில் கூறுகிறார். என்னுடைய மகன் பெயர் என்னவென்றால் கோவிந்தசாமி ஆகும்.

4. என்னுடைய மகன் கோவிந்தசாமி என்னென்ன ஆவணங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சொத்து சர்வே எண்.81 ஆனது 20 நபர்களின் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 20 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 11 ஏக்கர் சொத்தும் தற்போது வரை பாகம் எதுவும் பிரிக்கப்படாமல் தான் இருக்கிறது என்று சொன்னால் சாட்சி அதற்கு எங்களுக்கு தனியாக உள்ளது என கூறுகிறார். அப்படி எனக்கு தனியாக இருப்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு தனியாக சொத்து இருப்பதற்கு பட்டாவோ அல்லது பத்திரமோ எதுவும் இல்லையென்று சொன்னால் சரிதான்.

5. கிருஷ்ணன் என்பவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார். எனக்கு திருமணம் நடைபெற்று எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 40 வருடம் இருக்கும். கடந்த 40 வருடமாக வடக்குபட்டு கிராமத்தில் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய கணவர் திருப்பதி அவர்களின் வருமானத்தில் தான் கல்யாணம் நடைபெற்றது முதல் வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் மூன்று பேரும் பயிர் செய்து வாழ்க்கை நடத்தி வருகிறோம் என சாட்சி கூறுகிறார். அவ்வாறு மூன்று பேரும் பயிர் செய்து சம்பாதித்து வந்ததை காண்பிப்பதற்கு பட்டா அடங்கலோ எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

6. 4 முதல் 7 பிரதிவாதிகள் தற்போது ஒன்றாகத்தான் வசித்து வருகிறோம் என்றால் ஆமாம். இந்த வழக்கை தாக்கல் செய்ய சமயம் வக்கீல் அலுவலகத்திற்கு என்னுடைய மகன் கோவிந்தசாமி மற்றும் நான்கு முதல் ஏழு பிரதிவாதிகள் அனைவரும் வந்திருந்தனர் என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கான செலவுமே மேற்படி நபர்கள் தான் சேர்ந்து செய்தோம் என்று சொன்னால் நான் மற்றும் நந்தினி, சுந்தரி, பிரியதர்ஷினி சேர்ந்து தான் செலவு செய்தோம். இந்த வழக்கின் நான்காம் பிரதிவாதி திருப்பதி என்பவர் காளியம்மாள் என்பவரின் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு செலவு செய்ய அவர் எதுவும் கொடுக்கவில்லை என்றால் அவர் வரவில்லை.

***குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.